3 SEP 1971

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 220

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 200

யாழ்ப்பாணம் ஆவணி 14 ரஜப் 8 திங்கட்கிழமை (30-8-71)

நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
ஹரன் ஜுவல்லர்ஸ்
போன் 444
தந்தி: இரத்தினம்ஸ்
50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# மூடப்படவிருந்த ரசாயன தொழிற்சாலை விஸ்தரிப்பு

## பரந்தனில் அமைச்சர் சுபசிங்கா தகவல்

— நமது நிருபர் கா. யோகநாதன் —

யாழ்ப்பாணம், திங்கள்

"தேசிய அரசாங்கம் ஒரு காலத்தில் பரந்தன் ரசாயனத் தொழிற்சாலைக்கு மூடுவிழா நடாத்தத் திட்டமிட்டிருந்தது. அந்தக் காலம் எல்லாம் கடந்து இன்று இத் தொழிற்சாலையை லாபகரமாக நடத்தலாம் என உறுதிப்படுத்த விரும்புகிறேன். அதனாலேயே இத்தொழிற்சாலையை விஸ்தரித்து, உற்பத்தியைப் பெருக்குவதோடு, வேலைவாய்ப்பு அளிக்கவும் திட்டமிட்டிருக்கிறேன்."

பரந்தன் ரசாயன தொழிற்சாலை இளப் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கைத்தொழில் அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை அதிபர் திரு பி. எல். டபிள்யு பெர்ணாண்டோ தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அமைச்சர் சுபசிங்கா மேலும் கூறியதாவது:

இன்று இவ்விழாவிற்கு சமுகம் கொடுத்ததைப் பயன்படுத்தித் தொழிற்சாலையைச் சுற்றிப் பார்த்து இங்குள்ள பிரச்சினைகள் பற்றி நேரில் உரையாடினேன். பல கஷ்டங்கள் இன்னல்கள் மத்தியில் இத்தொழிற்சாலை முன்னேற்றப் பாதையில் செல்வதை நேரில் காணக்கூடியதாக இருந்தது.

இலங்கையில் உள்ள ஏனைய கூட்டுத்தாபனங்களில் இத்தொழிற்சாலை பழமை வாய்ந்த ஒரு தொழிற்சாலையாகும். எத்தனையோ கஷ்டங்கள் மத்தி

5-ம் பக்கம் பார்க்க

## தொழிற்சாலை அன்றும் இன்றும்

யாழ்ப்பாணம், திங்கள்

"கோஸ்டிக் சோடா விற்பனையை உயர்த்தியதால் 5 வீத லாபம் அதிகரித்திருக்கிறது. கூடிய விரைவில் பத்து சதவீத லாபத்தை பெறலாம் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது"

இவ்வாறு பரந்தன் ரசாயன தொழிற்சாலை இளப் தின விழாவிற்குத் தலைமை தாங்கிய பரந்தன் ரசாயன கூட்டுத்தாபன தலைவர் திரு. பி. எல். டபிள்யூ. பெர்ணாண்டோ கூறினார்.

திரு. பெர்ணாண்டோ மேலும் கூறியதாவது:-

"62-ம் ஆண்டு இத்தொழிற் சாலைக்கு ஒடிட்டர் டெபியூடி ஜெனரல் என்ற சோதாவில் விஜயம் செய்திருந்தேன். அப்போது இத் தொழிற்சாலை வெறும் கட்டடமாகவே காட்சியளித்தது. அரை குறைக் கட்டடங்களையும், கறள்பிடித்த யந்திரங்களையுமே அன்று காணக்கூடியதாக இருந்தது. மூடுவிழா செய்வதற்குத் தயாரான நிலையில்தான் தொழிற்சாலை இருந்தது.

இன்று தொழிலாளர்களின் ஒத்துழைப்பினாலும், ஊக்கத்தினாலும் இந்த தொழிற்சாலை வெற்றிகரமாக இயங்கிவருகிறது.

4 கோடி ரூபா செலவில் இத்தொழிற்சாலை விஸ்தரிக்கப்பட விருக்கிறது.

பரந்தன் ரசாயன விளையாட்டுக்கழக தலைவர் திரு. எஸ். எல். சபாரத்தினமும் பேசினார். திருமதி. பெர்ணாண்டோ; விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார். கலைநிகழ்ச்சிகளும் போட்டி நாடகங்களும் இடம்பெற்றன.

தமிழ் நாட்டில்

## மதுவிலக்குரத்து: இன்று முதல் அமுல்

### ரூ. 26 கோடி வருமானம்

சென்னை, ஆக. 29

23 ஆண்டுகளின் பின்னர் தமிழ் நாட்டில் நாளை முதல் மதுவிலக்கு நீக்கப்படுகின்றது.

சுமார் பத்தாயிரம் சாராயக் கடைகள் நாளைய தினம் திறக்கப்பட்டிருக்கும். மதுவிலக்கை ரத்து செய்யும் அவசர சட்டமொன்றை நேற்று தமிழ்நாடு அரசு பிரகடனப்படுத்தியது. 71ம் ஆண்டு மதுவிற்பனைக்கான அவசர சட்டமொன்றும் அறிவிக்கப்பட்டது.

சாராயத்தவறணைகளையும் கள்ளுக்கடைகளையும் ஏலத்தில் விட்டதின் மூலமும் லைசன்ஸ் வழங்கியதன் மூலமும் தமிழ்நாடு அரசுக்கு 26 கோடிரூபாய் ஏற்கனவே கிடைத்துள்ளது.

## எம். ஆர். ராதா நாடகக்கோஷ்டி

யாழ்ப்பாணம், திங்கள்

நடிகவேள் எம். ஆர். ராதாவின் நாடகக் கோஷ்டியினர் அக்டோபர் மாதம் 1ம் தேதி யாழ்ப்பாணத்திற்கு நாடகங்கள் நடத்துவதற்காக வருகின்றனர்.

நடிகர் எம். ஆர். ராதா அவரது மகன் எம். ஆர். ஆர். வாசு, நடிகை லட்சுமி, எம். என். ராஜம் ஆகியோர் இக்கோஷ்டியில் வருகின்றனர்.

இந்நாடகக் கோஷ்டியில் மற்றும் 32 நடிகர்கள் வருவார்கள் எனத் தெரிய வருகிறது.

இந்த நாடகக் கோஷ்டியினர் யாழ்ப்பாணத்தில் பல வேறு இடங்களையும் பார்வையிடுவார்கள்.

## மொழித் திணைக்களத்தில் தமிழ்மொழியின் சங்கடம்

### பிரதமருக்கு தமிழ்ப்பிரிவு உத்தியோகத்தர்கள் மகஜர்

கோட்டை, ஞாயிறு

"மொழித் திணைக்களத்தில் தமிழ்மொழிக்கு எதிரான நடவடிக்கைகள் மொழித் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்படுகின்றன. இதை விசாரணை செய்யக் குழு ஒன்றை நியமிக்கவேண்டும்"

மொழித் திணைக்களத் தமிழ் ஊழியர்கள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் மேற்கண்டவாறு கோரியுள்ளனர்.

இவ்வூழியர்கள் மேலும் பிரதமரிடம் தெரிவித்துள்ளதாவது:

அரசாங்கம் தேசிய ஒருமைப்பாட்டைக் கொண்டுவர முயற்சித்துவரும் இவ்வேளையில் மொழித் திணைக்களம் காலஞ்சென்ற பிரதமர் திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவால் தமிழுக்கு அளிக்கப்பட்ட வசதிகளை; உரிமைகளைக் கூட மறுக்கிறது.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் தமிழ்ப்பகுதி உதவி ஆணையாளர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதோடு இந்தப் பதவியை இல்லாமற் செய்வதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் பொது நிர்வாக அமைச்சு இதற்கு இடம் கொடுக்காது 4ம் தர நிர்வாகசேவை அதிகாரியை நியமிப்பதற்குப் பதில் 5ம் தர நிர்வாக சேவை அதிகாரியை நியமித்தது. இந்த அதிகாரிக்கு அளிக்கப்பட வேண்டிய வசதிகள் அளிக்கப்படவில்லை. இவரும் சிங்கள உதவியாளரின் மேற்பார்வையின் கீழ் கடமையாற்றவேண்டி ஏற்பட்டது. சமீபத்தில் இவரும் மரணமானார். ஆனால் இவரது இடத்திற்கு இதுவரை ஒருவரும் நியமிக்கப்படவில்லை. இப்பதவியையும் ஒழித்துவிட முயற்சி எடுக்கப்பட்டது.

(5-ம் பக்கம் பார்க்க)

யாழ். நவீன மார்க்கட்

## நாளைக்குள் வேலை முடியவேண்டும்; இன்றேல் மாநகரசபை பொறுப்பேற்குமாம்

யாழ்ப்பாணம், திங்கள்

"யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் முழு வேலைகளும் இம்மாதம் 31-ம் தேதிக்குள் முடியவேண்டும். இது நடைபெறாவிட்டால் சபை அதனைப் பொறுப்பேற்றுக்கட்டி முடிக்கவேண்டிய நிலை ஏற்படும்"

புறாணியிலிருந்து நேற்று இங்கு வந்து சேர்ந்த யாழ்ப்பாண மேயர் திரு அல்பிரட் துரையப்பா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேயர் மேலும் தெரிவித்ததாவது: மார்க்கட் கட்டுவதற்கு ஏற்கனவே போதிய அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது ஆதலால் மேலும் அவகாசம் கொடுக்கமாட்டேன். மார்க்கட் வேலைகள் தாமதிக்கப்படுவதால் சபைதான் நஷ்டமடைகிறது. இத்தாமதத்தினால் மாதாமாதம் கிடைக்கும் நவீன மார்க்கட் கடைகளின் வாடகைப்பணங்கள் சபைக்குக் கிடைக்காமல் போகிறது.

இம்மாத இறுதிக்குள் மார்க்கட் வேலைகள் முடியாவிட்டால் இதுபற்றி ஆலோசித்து ஒரு நல்ல முடிவு எடுக்கத்தீர்மானித்திருக்கிறேன்."

MANOHARA
(Jaffna)
Daily
4-45 7-00 & 9-45 p.m.
Sat .Sunday10-30a m.
Richard Johnson
in
DANGER ROUTE

வெல்லிசினிமா
சாவிப்பாய்
பி ப 2-30, 6-30, 10-00
ஏ.வி.எம். ராஜன்-வாணிஸ்ரீ
நடித்த
அன்னையும் பிதாவும்

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p m.
Sat, Sundays 10-30 A.M.
Tony Russel
in
THE THIEF OF
SAMARKAN
(Color)

தினசரி பி.ப. 2-00, 9 45
திலீப்குமார்-வைஜந்திமாலா
நடித்த
பட்டாளியின் சபதம்

நாகலஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி: 4 30
சனி, ஞாயிறு 10-30
மட்டும்
ONE SPY TOO MANY

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2 30
ஹரிதாஸ்

இன்று முதல்
ராணி யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
★ ரவிச்சந்திரன்
★ காஞ்சனா
★ நாகேஷ்
★ மனோகர்
★ அசோகன்
நடித்த
நாலும் தெரிந்தவன்

வெலிங்டன் (யாழ் நகர்) லிடோ (யாழ்.நகர்)
பி. ப. 2-30 மாலை 6-30 (காலை 10-00 மணிமட்டும்)
இரவு 10-00 மணி.
மற்றும்
கெப்பிட்டல்—பிளாஸா
திரைகளில்



நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
(3 வேடங்களில்)
ஜெயலலிதா
நாகேஷ், நம்பியார், சுந்தரராஜன்
நடித்த
சாந்தி பிலிம்ஸ்
தெய்வமகன்

லிடோ (யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-00, மாலை 6-00 இரவு 9-30 மணி
★ ஜோய் அபேவிக்ரம
★ க்ளேறிஸ் டி சில்வா
★ சந்தியாகுமாரி
நடித்த
அல்லப்புகெதற
(சிங்களம்)

## கேள்வி விளம்பரம்

### வீரப்பலை றேட் வேலை

மேற்குறிய வேலைக்கான கேள்விகள் மயிலிட்டிக் கிராமசபைத்தலைவரால் 10-9-71-ம் திகதி காலை 9-30 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

வேலைக்கான கேள்விப்பத்திரச்செலவு ரூபா 10-00 சதமும் வேலைக்கான கேள்விப்பிணை ரூபா 25-00 சதமும் கட்டி மேற்குறிய வேலைக்குரிய கேள்விப் பத்திரத்தை கிராம சபை அலுவலகத்தில் வேலை நேரங்களில் 9-9-71 பகல் 12மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கொண்டு இவ்வேலையைப் பற்றிய விபரங்களைக் கிராமசபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

கு. தி. இராஜதுரை,
தலைவர்,
கிராமசபை,
மயிலிட்டி.

3651

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 30—8—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ அல்ல 61 மீ

காலை 6-00 நாதாஞ்சலி, 6-10 சைவநற்சிந்தனை, 6-15 கிறிஸ்தவ நற்சிந்தனை 6-20 துதிப்பாடல்கள், 7-00 மெல்லிசை, 7-30 திரைகானம், 7-45 இசைவேளை, 8-00 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ அல்ல 49 மீ

பகல் 12-00தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அல்ல 61 மீ.

காலை 4-30 கல்விஒலிபரப்பு, 5-00 சிறுவர்பாடல்கள்5-15 வளரும்பயிர், 5-45 கல்விச்சேவை.

இரவு6-15இசைப்பயிற்சி, 6-45 கிராமியப்பாடல்கள், 7-00 பழையநினைவுகள், 7-15 பாட்டு, 7-45 கலாச்சார நிகழ்ச்சித்தொகுப்பு. 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம், 10-30செய்தித்தொகுப்பு.

## அனலைதீவு கி ச உப தலைவர்

ஊரதீவு, ஞாயிறு

அனலைதீவுக் கிராமசபையின் உப தலைவராக திரு. மு. வே. மயில்வாகனம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ராஜா யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30,
இரவு 6-30,10-00 மணி.
எம்.ஜி ஆர் வைஜந்தி
நடித்த
பாக்தாத் திருடன்

நல்லை

## இசைவிழாவில் இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமண்டபத்தில் நடைபெற்றுவரும் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 13 வது ஆண்டுத் தமிழிசை விழா இன்றைய நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு: —

மாலை 5-30 மணி- அண்ணாமலை இசைத் தமிழ் மன்ற மாணவமணிகளின் பாட்டும் மிருதங்கமும்,

6- 15 மணி- திரு எஸ் கணேசசுந்தர பாகவதர்-பண்ணிசை

7-30 மணி- திரு இளையதம்பி- பாட்டு.

இரவு 9-00 மணி திரு எஸ் எஸ் இரத்தினம்பிள்ளை பாட்டு

திருவாளர்கள் என் சரவேஸ்வர சர்மா, விமரலிங்கம் ஆகியோர் வயலினும், திருவாளர்கள் பொன் ஆத்மானந்தா, ப சின்னராசா, வே அம்பலவாணர் ஆகியோர் மிருதங்கமும்வாசிப்பர்.

## காரியாதிகாரிக்கு முறையீடு

ஊரதீவு, ஞாயிறு

ஊரதீவு கிராம முன்னேற்றச் சங்கம் கடந்த 5 வருடங்களாகச் செயலற்றிருக்கிறது என்றும், திரு. வி. நவரத்தினம் எம். பி. யாக இருந்த காலத்தில் அரசினரால் வழங்கப்பட்ட நிதியில் கட்டப்பட்ட ஊரதீவு நெசவுநிலைய வரவு-செலவு விபரங்களை இன்னும் சங்கம் வெளியிடவில்லை எனவும் இப்பகுதி மக்கள் பலர் தீவுப்பகுதிக் காரியாதிகாரியிடம் முறையிட்டுள்ளனர்.

## ஆண்டு விழா கொண்டாடுவர்

மன்னார், ஞாயிறு

அரசாங்கப் பொது ஊழியர் சங்கத்தின் 8-வது ஆண்டுவிழாவை அடுத்த மாதம் 25-ம் திகதி கொண்டாடுவதெனச் சங்கம் தீர்மானித்துள்ளது. திருக்கோணமலை இறீன் வீதிசரஸ்வதி வாச மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு க. இராசேந்திரம் தலைமையில் விழாவைக்கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டது

## ஏல விற்பனை

நிமித்திக்கலை வட்டாபத்தை வீதியில் 10-ம் நம்பர் இலக்கக் கடையில் நகை அடைவு பிடிக்கும் கா. கனகரத்தினம் அவர்களிடம் 4-8-69 முதல் 31-8-70 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவையும் 1971 செப்ரம்பர் 19-ந் திகதி காலை 9 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

N. M. A. C. Abdul Hameed,
Auctioneer.
110, Centre,
Colombo-15

3000

## வரிவிளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஓட்டு வேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்துகொடுக்கப்படும் ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

3524

### விற்பனைக்கு

புத்தகம்:

'கணித விஞ்ஞான வாய்பாடுகள்'-திருத்திய இரண்டாம் பதிப்பு-இதில் அலகுகள், அளவை மாற்றம், சூத்திரங்கள், மடக்கைகள், திரிகோண கணித வாய்பாடுகளுடன் G. C. E. வகுப்பின் எண்கணிதம், தூயகணிதம், பௌதிகம், இரசாயனம், பிரயோக கணிதம் ஆகிய பாடங்கள் படிக்கும் மாணவர்களுக்கு முக்கிய குறிப்புக்கள் யாவும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விற்பனை உரிமையாளர்கள் தனலக்குமி புத்தகசாலை சுன்னாகம். விலை ரூபா 1-90.

3502

ராதா மின்சார மருந்து. தலைவலி, ஜலதோஷம் வாய்வுப்பிடிப்புகள் நோவுகள் களுக்கு வாதம் மற்றும் அனேக நோய்களுக்கு உபயோகமான சிறந்த மருந்து. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

3523

அல்லைப்பிட்டியில் குடியிருப்பதற்கும் தென்னை பயிரிடுவதற்கும் ஏற்ற 50 பரப்பு நிலம். லான்ட் இன்வெஸ்ற் மென்ட்ஸ், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். போன்: 7453.

3527

### தேவை

இடியப்ப வேலை, இனிப்பு வகைச் சிற்றுண்டிகள் தயாரிப்பதில் அனுபவமுள்ள ஆள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். "சாந்தி லொட்ஜ்", யாழ்ப்பாணம்.

3533

### கல்வி

க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்கான கலை, விஞ்ஞான, வர்த்தக, விசேட ஆங்கில, சிங்கள (காலை/மாலை) வகுப்புகளும் நுண்கலை (Fine Arts) புதுமுக வகுப்புக்களும் நடைபெறுகின்றன. யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, 107, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

3517

## மின்சாரம் விநியோகிக்க நடவடிக்கை

ஊரதீவு, ஞாயிறு

காரைநகர் வடக்கு கிராமசபைப் பகுதிக்குள் மின்சார விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகளைக் காரைநகர் வடக்கு கிராமசபைத் தலைவர் திரு க மு அம்பலவாணர் செய்துவருகிறார்.

வின்சர் யாழ்ப்பாணம் (தினசரி 4 காட்சிகள்)
★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ், ★ பி. எஸ். வீரப்பா, ★ நிர்மலா
நடித்த
சங்கமம்

## பசுபிக் சமுத்திரத்தில்

# அணுகுண்டு சோதனைகளை பிரான்ஸ் நிறுத்திவிட்டது

## வெளிநாட்டு எதிர்ப்பு காரணம்

பாரிஸ், ஆகஸ்ட் 29

**பசுபிக் சமுத்திரத்தில் அணுகுண்டு சோதனை நடத்தவிருந்ததை பிரான்ஸ் நிறுத்திவிட்டது.**

பசுபிக் சமுத்திரத்தில் பிரான்ஸ் அணுகுண்டு சோதனைகளை நடத்துவதற்கு லத்தீன் அமெரிக்க நாடுகள் பலவும் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தன.

பெருநாடு பிரான்சுடனான ராஜதந்திர உறவுகளை முறித்துக்கொள்ளப் போவதாகக்கூட பயமுறுத்தியது.

இந்த எதிர்ப்புகளுக்குப் பணிந்தே பிரான்ஸ் பசுபிக் சமுத்திரத்தில் அணுகுண்டு சோதனை நடத்துவதை நிறுத்துவதற்கு முடிவுசெய்திருக்கிறதென்று அறியப்படுகின்றது.

முக்கியமாக பெருநாட்டின் எதிர்ப்பின் காரணமாகவே பிரான்ஸ் தனது சோதனைகளை நிறுத்த முடிவுசெய்ததாகக் கூறப்படுகின்றது.

ஆனால் டாஹிட்டியிலிருந்து வரும் செய்திகள் வேறுமாதிரியாகவிருக்கின்றன.

பசுபிக் சமுத்திரத்தில் கடந்த 14-ம் திகதியும் அதற்குமுன்னரும் நடத்திய சோதனைகளில் பிரான்ஸ் பூரணமாகத் திருப்தியடைந்திருப்பதாகவும் எனவே இந்த ஆண்டில் நடத்தப்படவிருந்த ஏனைய சோதனைகளை நிறுத்துவதற்கு முடிவு செய்திருப்பதாகவும் டாஹிட்டியிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றது.

பசுபிக் சமுத்திரத்தில் பிரான்ஸ் தொடர்ந்தும் அணுகுண்டு சோதனைகளை நடத்தினால் அந்த நாட்டுடனான ராஜதந்திர உறவுகளை துண்டித்துக் கொள்ளப் போவதாக பெரு பயமுறுத்தியிருந்தது.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் இந்த அணுகுண்டு சோதனைகளில் கதிரியக்கத் துகள்கள் விழுந்து ஆபத்துகளை ஏற்படுத்திவிடுமென்று இந்த நாடுகள் அச்சம் தெரிவித்தன.

அணுகுண்டு சோதனைகளை காற்று மண்டலத்தில் நடத்துவதில்லையென அமெரிக்கா சோவியத் யூனியன், பிரிட்டன் ஆகிய நாடுகள் ஒப்பந்தம் செய்துள்ளன. ஆனால் இந்த ஒப்பந்தத்தில் பிரான்சும் சீனாவும் மாத்திரமே சேர்ந்து கொள்ளாமலிருந்து வருகின்றது.

## தூரகிழக்கிலிருந்து அமெரிக்கா முற்றாக விலகவேண்டும்

— சூ-என்-லாய்

பெல்கிரேட், ஆகஸ்ட் 29

தூரகிழக்கு நாடுகளிலிருந்து அமெரிக்கத் துருப்புக்கள் முற்றாக வெளியேற வேண்டும் என்று சீனப்பிரதமர் சூ-என்-லாய் கூறியுள்ளார்.

யூகோஸ்லாவியா பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அமெரிக்க அதிபர் நிக்சனைச் சந்திக்கும்பொழுது இதுபற்றி அவருடன் நான் பேச்சுவார்த்தை நடத்துவேன். தைவான், தென் கொரியா, தாய்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளிலுள்ள அமெரிக்கத் துருப்புக்கள் வெளியேறவேண்டும். அமெரிக்கா தனது துருப்புக்களை அங்கிருந்து முற்றாக வெளியேற்றிவிட்டால், தென்வியட்நாம், லாவோஸ், கம்போடியா ஆகிய இடங்களிலுள்ள மக்கள் தங்கள் இறுதி வெற்றியடையும் வரை சீனா உதவி அளித்துவரும், இப்பகுதிகளிலுள்ள மக்களின் விருப்பத்தை சீனா நிறைவேற்றியே தீரும் என்று தெரிவித்துள்ளார்.

## வெள்ளத்தில் 400பேர் பலி

புதுடில்லி, ஆக. 29.

வடகிழக்கு இந்தியாவில் ஏற்பட்ட பெரு வெள்ள நிலைமை இப்பொழுது சீரடைந்து வருகின்றது. சில ஆறுகளில் நீர்மட்டம் குறைந்துவருகின்றன.

இதுவரை சுமார் 400 பேர் பலியாகியிருக்க வேண்டும் என்று அஞ்சப்படுகின்றது. உத்தரப்பிரதேசத்தில் மாத்திரம் 17பேர் பலியாகியுள்ளனர். மேற்கு வங்காளத்தில் 36 பேர் மரணமாகியுள்ளனர்.

## கிழக்குப் பாகிஸ்தானில் தொடர்ந்து கிளர்ச்சி

புதுடில்லி, ஆக. 29

கடந்த மூன்று நாட்களில் 72 பாகிஸ்தான் போர்வீரர்களை வங்காளதேச விடுதலை வீரர்கள் கொன்றுவிட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன

இஸ்கட் பிரம்மன் பாரியாய் குமில்லா ஆகிய நகரங்களுக்கிடையிலான போக்குவரத்துக்கள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுவிட்டதாகவும் இந் நகரங்களுக்கிடையிலான பாலங்களை பாலத்தையும் விடுதலை இயக்கத்தினர் தகர்த்தெறிந்துவிட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன

### பெருவெள்ளம்

கிழக்குப்பாகிஸ்தானில் கடும் மழைபெய்து பெருவெள்ளம் ஏற்பட்டிருக்கின்றது. சுமார் 15 லட்சம் மக்கள் வீடுவாசல்களை இழந்து தவிக்கிறார்கள்

### லண்டனில் இயக்கம்

கிழக்குப் பாகிஸ்தான் பிரதம நீதியரசரும் டாக்காப் பல்கலைக்கழக உபவேந்தருமான சௌத் சௌத்திரி தலைமையில் முறையான வங்காள தேச இயக்கம் ஒன்று லண்டனில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பி.பி.சி அறிவித்துள்ளது. திரு. சௌத்திரி வங்காள தேசப் பிரதிநிதியாக லண்டனில் இருந்துவருகிறார். இந்த இயக்கத்தை ஒட்டி அங்கு இது வங்காள தேசத்தின் தூதரகம் போல் இயங்கி வருமாம்.

### பாக். ஆட்சேபம்

வங்காள தேச தூதரகம் ஒன்று லண்டனில் இயங்கி வருவதற்கு அனுமதி அளித்த பிரிட்டிஷ் அரசாங்கத்தின் செயலுக்கு பாகிஸ்தான் அரசாங்கம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. இவ்விதமான செயல் இருநாடுகளுக்குமிடையேயுள்ள ராஜரகத் தொடர்பையும் அவை சமுகமாகச் செயல்படுவதையும் பலவீனப்படுத்திவிடுமென பாகிஸ்தான் தனது ஆட்சேபக் குறிப்பில் தெரிவித்துள்ளது

### வங்காளிகள் நீக்கம்

கடந்த இரு வாரங்களுக்கு முன் கராச்சிக்குவடமேற்கே உள்ள விமானத்தளத்திலிருந்து பாகிஸ்தான் விமானப்படை ஒன்றை வங்காளியான விமானி ஒருவர் கடத்த முயன்றதை அடுத்து, விமானப்படையிலுள்ள வங்காளிகளான விமானிகள் அனைவரும் விமானம் செலுத்துவதிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்

### பேராசிரியர்களுக்கு தடுப்பு

டாக்காப் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த நான்கு பேராசிரியர்களை பாகிஸ்தான் இராணுவத்தினர் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்திருப்பதாக அமெரிக்கப் பத்திரிகை நிருபர் ஒருவர் தெரிவித்துள்ளார்

## 34 பேருடன் விமானம் விழுந்து நொறுங்கியது

### பலர் பலியாகினர்

கோப்பன்ஹேகன் ஆக. 29

டென்மார்க்கின் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி சேதமுற்றதில் ஏராளமானோர் பலியாகியிருப்பதாக அஞ்சப்படுகின்றது.

நோர்வேயிலிருந்து புடாபெஸ்ட் நோக்கி 34 பிரயாணிகளுடன் இந்த விமானம் போய்க்கொண்டிருந்தது. கோப்பன்ஹேகனுக்கு சுமார் 7 மைல் தொலைவில் இந்த விபத்து ஏற்பட்டது. ஆறு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. விமானத்தின் வால்பகுதியில் தீப்பற்றியதாகவும் அதன் காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## "பொருளாதார விருத்திக்கு வடக்கின் உதவிதேவை"

— அமைச்சர் சுபசிங்கா

குருநகர், ஞாயிறு

"உள்நாட்டு உற்பத்தித் துறையில் எமது நாடு முன்னேறி வருவதைக் கண்டு நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். இதில் யாழ்ப்பாண மக்கள் காட்டும் ஆர்வமும் முன்மாதிரியும் என்னை ஆச்சரியத்திற்குள்ளாக்கியிருக்கின்றது. உங்கள் ஆர்வத்துக்கும் முயற்சிகளுக்கும் எமது உதவி என்றும் இருக்கும். எந்தவிதபேதமுமின்றி நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவும், உற்பத்தியைப்பெருக்கவும் நாம் பாடுபடவேண்டும். இதற்கு வடபகுதி மக்களின் ஒத்துழைப்பும் தேவை"

இவ்வாறு வட இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தினரால் யாழ்ப்பாணம் பாம் கோட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இரவு போசனவிருந்தில் கலந்துகொண்டு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கைத்தொழில் அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா கூறினார்.

அவ்விருந்தில் வர்த்தக சம்மேளன உறுப்பினர்களுடன் யாழ்நகர பதில் மேயர் திரு. ஆ. துரைராசசிங்கம், நல்லூர் எம். பி திரு. சி. அருளம்பலம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில்: நாட்டின் இன்றைய தேவைக்கேற்றமுறையில் நாம் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். கைத்தொழிற்றுறையில் ஏனைய நாடுகளுடன் எமது நாட்டை ஒப்புநோக்குமிடத்து எவ்வளவோ வித்தியாசம் இருந்தபோதும் வெளிநாட்டு உற்பத்திப் பொருட்களுடன் போட்டிபோட்டு விற்பனை செய்யக்கூடிய அளவு தரத்தில் யாழ்ப்பாணப்பொருட்கள் அமைந்துள்ளதைக்காண்கிறேன். நாடுமுன்னேறுவதற்கும் கைத்தொழில் வளர்ச்சி பெறுவதற்கும் நாம் எல்லோரும் ஒன்றாக ஒற்றுமையாக செயல்படவேண்டும்.

இவ்விருந்தில் கலந்துகொண்டவர்களை சம்மேளனத்தலைவர் அறிமுகம் செய்துவைக்கையில், "நானும் திரு துரைராசசிங்கமும் நீண்டகால நண்பர்கள்" என்று அமைச்சர் வர்ணித்தார்

அமைச்சரது வருகைக்கு சம்மேளனத்தின் சார்பில் நன்றிதெரிவித்து சம்மேளனச் செயலாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை பேசுகையில், அமைச்சரது இன்றைய வடபகுதி விஜயம் இத்தநாட்டின் உற்பத்தி அபிவிருத்திக்கு ... பொருளாதார ... சிக்கும் பெரும் ... அமைந்துள்ளது என்றும் இதன்மூலம் வடபகுதி மக்களும் இலங்கையின் அபிவிருத்தியின் ஒரு முக்கிய அங்கமாக அமைவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

ஊரதீவு, ஞாயிறு

இம்மாத இறுதியில் வேலணையில் நடைபெறவிருந்த அகில இலங்கை சைவப்புலவர் சங்க மாநாடு வேறொரு திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளதாம்.

## தெ. வியட்நாமில் பொதுத் தேர்தல்

சைகோன், ஆக 29

தென்வியட்நாம் ஆட்சி மன்றத்தின் கீழ்சட்டசபைக்கான தேர்தல் இன்று நடைபெறுகின்றது. சுமார் 70 லட்சம் மக்கள் இந்தவாக்களிப்பில் கலந்து கொள்வார்கள் இந்தத் தேர்தலையொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கம்யூனிஸ்ட்டுகள் தேர்தலை குழப்புவதற்கு முயற்சி செய்வார்கள் என்று அஞ்சப்படுவதினாலேயே இந்த ஏற்பாடு.

## எகிப்து கோரிக்கை

கெய்ரோ ஆக 29

ஜெருசலம் நகர் சம்பந்தமாக ஐ நா பாதுகாப்புச் சபை நடத்தவிருக்கும் விவாதத்தில் கலந்து கொள்ள தன்னையும் அனுமதிக்கும்படி எகிப்து கேட்டிருக்கின்றது. இந்தச் சபையில் எகிப்து ஓர் அங்கத்துவ நாடாக இருக்கவில்லை. ஜெருசலம் விஷயத்தில் முழு இஸ்ரேல் அரபு பிரச்னையும் சம்பந்தப்பட்டிருப்பதால் இதில் எகிப்துக்கும் அதிக அக்கறையுண்டென அது தெரிவித்துள்ளது.

# "தொழிற்சங்கவாதிகள் ஆக்கத்துக்கு உதவ வேண்டும்"

## யாழ். ஆஸ்பத்திரியில் உதவி சுகாதார அமைச்சர்

குருநகர், ஞாயிறு "இன்றைய அரசு நாட்டை வளம்படுத்தும் முயற்சியிலும், மறுசீராக்க வேலைகளிலும் இலங்கையை ஒரு சோஷலிச குடியரசு நாடாக்கும் திட்டங்களிலும் ஈடுபட்டிருக்கும் இன்றைய நிலையில் சிறு பிரச்சினைகளை பெரிதுபடுத்தாது அரசுக்குத் தேவையான ஆக்கவேலைகளில் உதவு வதற்கு தொழிற்சங்கவாதிகள் உதவி கொடுக்க வேண்டும்".

இவ்வாறு ஸ்ரீலங்கா சுகாதார கனிஷ்ட சேவையாளர் சங்கத்தின் யாழ்ப்பாண கிளையின் காரியாலயத்தை நேற்று முன்தினம் மாலை திறந்து வைத்துப் பேசிய உதவி சுகாதார அமைச்சர் திருமதி சிவா ஒபயசேகரா குறிப்பிட்டார். இச் சங்கத்தின் பெண் ஊழியர்களால் ஆராத்தி எடுத்து வரவேற்கப்பட்ட அமைச்சர் சங்க அலுவலகத்தை குத்துவிளக்கேற்றித் திறந்துவைத்தார். அமைச்சருடன் சுகாதாரப் பகுதி டைரக்டர் டாக்டர் சமுத், வடபகுதி சுகாதார அத்தியட்சகரும் மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: வடபகுதியில் உள்ள வைத்தியசாலைகளின் குறைகளை நேரில் கண்டறிவதற்காகவே நான் இவ் வடபகுதி விஜயத்தை மேற்கொண்டேன். இது எனக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்திருக்கின்றது. வடபகுதியில் உள்ள ஆஸ்பத்திரிகள் நல்லமுறையில் இயங்கி வருகின்றன. இவற்றில் இருக்கும் சிறு குறைகளை தீர்ப்பதற்கு எமது அமைச்சு நடவடிக்கை எடுக்கும் என்பதை இங்கு உறுதி கூறுகின்றேன். இதற்கு சகல தொழிலாளர்களும் எமக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும். சிறு பிரச்சினைகளை இங்குள்ள அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் தீர்த்துவைக்க தொழிலாளர்கள் முன்வர வேண்டும். தொழிலாளர்களுக்கிருக்கும் கஷ்டங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க நாம் எப்போதும் தயாராக இருக்கின்றோம்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் நான் மறக்கமுடியாத இடமாக அது இருக்கின்றது. நான் சிறு வயதில் கல்வி பயின்ற இடம் யாழ்ப்பாணம். எனவே இப்பகுதியில் எனக்கு பற்றும் பாசமும் இருக்கிறது. ஆகவே இங்குள்ள குறைகளை நான் மறக்காமல் தீர்த்துவைக்க எனக்கு ஆர்வமிருக்கிறது. இங்குள்ள தொழிலாளரின் குறைகளை நாம் தீர்த்துவைப்போம். ஆனால் தொழிலாளர் இங்குள்ள அதிகாரிகளுக்கு உதவியாக இருந்து உண்மையுடனும் கடமையுணர்ச்சியுடனும் சேவையாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

# "இரு காரியாதிகாரி பிரிவுகளாக்கவும்"

ஊரதீவு, ஞாயிறு அனலைதீவு, எழுவைதீவு, நாரந்தனை, காரைநகர் தெற்கு, காரைநகர்வடக்கு ஆகியகிராமசபைப் பகுதிகளையும் ஊர்காவற்றுறைப் பட்டினசபைப் பகுதியையும் இணைத்து ஒரு காரியாதிகாரி பிரிவையும், புங்குடுதீவு நயினாதீவு வேலணை அல்லைப்பிட்டி மண்டைதீவு ஆகிய கிராமசபைப் பகுதிகளை இணைத்து ஒரு காரியாதிகாரி பிரிவையும் ஏற்படுத்துமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், பொதுநிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் ஆகியோரை வேண்டும் தீர்மானமொன்றை அனலைதீவுக் கிராமசபை நிறைவேற்றியுள்ளது. அனலைதீவு அரசினர் ஆஸ்பத்திரிக்கு மின்சாரம் வழங்குமாறும் இச்சபை சுகாதார அமைச்சரையும் தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினரையும் கேட்டிருக்கிறது.

# கூ.சங்கங்களின் லாபத்தில் கிராம அபிவிருத்தி

கோட்டை, ஞாயிறு நாட்டின் பல பாகங்களிலுமுள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பெறப்படும் இலாபம் அவ்வப் பகுதிகளில் உள்ள கிராமங்களின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும்.

உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சின் சமீபத்திய திட்டத்தின் மேற்படி தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெறப்படும் இந்த வருவாயை அரசாங்கத்தின் வேறுதிட்டங்களுக்குப் பயன்படுத்தாது அவ்வப்பகுதிக் கிராம அபிவிருத்திகளுக்குப் பயன்படுத்துவதால் நல்ல பலனையடையலாம் என வர்த்தக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## செல்வி எலன் இன்று வருகிறார்

கோட்டை, திங்கள் மேற்குக் ஜெர்மன் ஆட்சிமன்ற பெண் அங்கத்தவரான செல்வி எலன் இன்று இலங்கை வருகிறார்.

பாங்கொக்கில் இருந்து வரும் இவர் இங்கு 3 நாட்கள் தங்கியிருப்பார். இலங்கையில் தங்கிநிற்கும் நாட்களில் இவர் மேற்கு ஜேர்மன் உதவியுடன் இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்களைப் பார்வையிடுவார் எனத் தெரியவருகிறது.

## லொறிவிபத்தில் சிறுவன் மரணம்

பருத்தித்துறை, ஞாயிறு பருத்தித்துறையைச் சேர்ந்த நாகேந்திரம் நாகரத்தினம் என்னும் ஐந்து வயதுச் சிறுவன் பருத்தித்துறை யாழ்ப்பாண வீதியில் லொறி விபத்தில் சிக்கி ஸ்தலத்திலேயே துடிதுடித்து இறந்தார். கே. திருநாவுக்கரசு என்ற லொறிச் சாரதியும் லொறியுடன் பருத்தித்துறைப்பொலிஸ் பாதுகாப்பில் உள்ளனர்.

## சங்காபிஷேகம்

உடுப்பிட்டி, ஞாயிறு புதூர் நாகதம்பிரான் ஆலய சங்காபிஷேகம் அடுத்த மாதம் 3-ம் திகதி நடைபெறவுள்ளது. அன்றைய தினமிரவு விசேஷ பூஜை ஆராதனைகளும் அபிஷேகமும் இடம் பெறும்.


# ராதா குரு பற்பொடி

பற்களை வெண்மையாக்கி வாய் நாற்றத்தைப் போக்கி, பற்களுக்கு பூரணமான பாதுகாப்பளிக்கிறது: பல்வலி, பல் அரணை, முரசு கரைதல், வாய்நாற்றம் முதலிய பல் சம்பந்தமான நோய்களுக்கு நிவாரணமளிக்கும்:

எங்கும் கிடைக்கும்.

ராதா குருபற்பொடி

என்று கேட்டு வாங்குங்கள்.

தயாரிப்பாளர்கள்!

"ராதா புரடக்ஸ்"

ஏக விநியோகஸ்தர்கள்!

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்துகள், மருந்துச் சரக்குகள், வாசனதிகள் வியாபாரம்.)

53, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 541

'பாலேந்திரா பில்டிங்,
160, செட்டியார் தெரு,
கொழும்பு-11


அமெரிக்க ஹிப்பிகள் மத்தியில்

# நமது வெற்றிலை - சுருட்டுக்கு பெரும் கிராக்கி!

கோட்டை, ஞாயிறு இலங்கை வெற்றிலையில் சுருட்டை சுற்றிப் புகைக்கிறார்களாம் அமெரிக்க ஹிப்பிகள்.

சமீபத்தில் இலங்கைக்கு வந்திருந்த ஹிப்பிகள் கோஷ்டி ஒன்று இவ்வாறு சுருட்டை வெற்றிலையில் சுற்றிப் புகைக்கும் முறையை அமெரிக்க இளம் பெண்களுக்குப் பழக்கியிருக்கிறார்களாம்.

இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்குச் செல்பவர்களிடம் அமெரிக்க இளம் பெண்கள் கேட்பது இலங்கைச் சுருட்டைப் பற்றித்தானாம்.

இலங்கையிலிருந்து சுருட்டையும் வெற்றிலையையும் அமெரிக்க இளம்பெண்கள் வேறு வழிகளில் தருவித்துக் கொள்வதிலும் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளார்களாம்.

பச்சைவெற்றிலையில் சுருட்டைச் சுற்றிப் பிடிப்பதன் மூலம் புத்துணர்ச்சி கிடைப்பதாக அமெரிக்க ஹிப்பிகள் கூறுகிறார்களாம். இலங்கைக்கு வரும் ஹிப்பிகள் கரையில் அடிவைத்தவுடன் சுருட்டையும் வெற்றிலையையும்தான் தேடிக்கொள்கிறார்களாம்

(நேற்றைய "ரிவிரெஸ" பத்திரிகையில் முதல் பக்கத் தலைப்புச் செய்தி)

## வடமராட்சியில் திருட்டு

உடுப்பிட்டி, ஞாயிறு வடமராட்சிப் பகுதியில் உள்ள தோட்டங்களிலிருக்கும் தண்ணீரிறைக்கும் இயந்திரங்களிலுள்ள விலையுயர்ந்த மின்சாதனங்கள் தினமும் பெருவாரியாகக் கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றன. திட்டமிட்டு இயங்கும் ஒரு கொள்ளைக் கோஷ்டியே இத்திருட்டுக்களைச் செய்து வருவதாகப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

இயைபாணன் இழக்கை தண்ணீரிறைக்கும் இயந்திர மொன்றின் சொந்தக்காரர் தோட்டத்தில் காவலாகப் படுத்திருந்தும் மறுநாள் தண்ணீரிறைக்கும் இயந்திரத்தின் மின் காந்தத்தைக் காணாது திடுக்குற்றார்.

இத்திருட்டுக்கள் சம்பந்தமாகப் பொலிசார் தீவிர புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

## புராதன குளம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது

கோட்டை, ஞாயிறு திருகோணமலை மாவட்டத்தில் சிற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோண்டப்பட்ட குளம் ஒன்று சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள கந்தளாய் என்னும் காட்டிலேயே மேற்படி குளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 1600 சதுரயார் விஸ்தீரணமுள்ள இக்குளம் நாலுபக்கமும் படிக்கட்டுகளையுடையதாக விருக்கிறது.

## பட்டுப்பூச்சி வளர்ப்பு விஸ்தரிப்பு

கோட்டை, ஞாயிறு தோட்டத்தொழில் அமைச்சு உள்ளூர் பட்டுத்தொழிலை விஸ்தரிக்க திட்டமிட்டுள்ளது.

தற்போது பல்லேகெலவில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் பட்டுப்பூச்சி வளர்ப்பு நடைபெறுகிறது. இது நல்ல பலனைக் கொடுப்பதால் மேலும் 50 ஏக்கர் நிலப் பரப்பைத் இத் தொழிலுக்குப் பயன் படுத்த அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

## நெப்போலியன் இல்லம் வெற்றி

பருத்தித்துறை ஞாயிறு துன்னாலை குட்டிங் ஸ்ரார் கழகம் நடாத்தி வருடாந்த விளையாட்டுப் போட்டியில் நெப்போலியன் இல்லம் முதலிடத்தையும் அலெக்சாண்டர் இல்லம் இரண்டாமிடத்தையும் பெற்றன. கயிறிழுத்தல் போட்டியில் விளையாட்டு வீரர்கள் வெற்றிபெற்றனர் விநோத உடைப்போட்டியில் நெப்போலியன் இல்லம் வெற்றி பெற்றது.

திரு. இ. நாராயணசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். போட்டியின் இறுதியில் செயலாளர் திரு. மு. ஸ்ரீஸ்கந்தராசா நன்றி தெரிவித்துப் பேசினார்.

## புங்குடுதீவு மேசன் பயிற்சி நிலையம்

ஊரதீவு, ஞாயிறு புங்குடுதீவு மேசன்பயிற்சி நிலையம் கடந்த ஆறுமாத காலமாக பயிற்சிபெறுவோரின்றிச் செயலற்றுக் கிடக்கிறது. ஆனால் இந்நிலைய ஊழியர்கள் தினமும் வந்து போகின்றனர். இந்நிலையம் பதுளைக்கு இடமாற்றம் செய்யப்படவிருப்பதாக அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்தது. இதன்காரணமாக பயிற்சியாளர்கள் எவரும் தெரிவு செய்யப்படவில்லை. ஆனால் இந்த உத்தரவு வாபஸ் பெறப்பட்டு நிலையம் வருத்திய டைப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் இடமாற்றம் நிகழவுமில்லை. பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்படவுமில்லை.

## "தமிழ்நாட்டு தாளவாத்தியச் சிறப்பு"

தாவடி, ஞாயிறு "முன்னாளிலே இசை கற்றுக்கொள்ள இயலாதிருந்தது. பலமைல் தொலைவுக்கு இடையேதான் ஒவ்வொரு சங்கீத வித்வான்கள் இருந்தார்கள் ஆனால் இன்றோ பல வித்வான்கள் தோன்றி இசைக் கலைக்குச் சேவை செய்துவருகிறார்கள் இசைக்குத் தாளம் அவசியமானது. இதில் மிருதங்கம் தனிச்சிறப்பு வாய்ந்தது. மேலைநாட்டுத்தாளவாத்திய கருவிகளிலும் பார்க்க தமிழ் நாட்டுத்தாள லயவாத்தியம்' சிறப்பு வாய்ந்தது எனில் மிகையாகாது. மிருதங்க இசைக்கலை வளர்ச்சிக்கு உழைப்பவர்களுக்கு ஊக்கமளிக்கவேண்டும்"

என்றின்வாறு திருநெல்வேலி நந்தி இசைமன்றத்தின் 3-வது ஆண்டுமிருதங்க இசை விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளில் தலைமை வகித்துரையாற்றிய, டாக்டர் திரு. க. சிவஞானரத்தினம் கூறினார்.

திருநெல்வேலி கலாமன்ற மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் ரசிகமணி திரு. க. செல்வநாயகம் சிறப்புரை நிகழ்த்தினார்.

கரகரப்பிரியா இராகத்தில் அமைந்த 'பஞ்சமிருதங்க தரங்கம்' சங்கீத பூஷணம் திரு பொ புஷ்பரத்தினத்தின் இசைக்கச்சேரி என்பனவும் இடம் பெற்றன.

# “வேறுநாட்டில் பிறந்திருந்தால் நாகா’ பிரதமராகியிருப்பார்”

## அஞ்சலிக் கூட்டத்தில் உரை

... நமது நிருபர் சி. பாலசிங்கம் ...

குருநகர் ஞாயிறு

"உண்மையான இலட்சிய வாதிகள் என்றும் இறப்பதில்லை. வஞ்சகமனமில்லாத உண்மையான தியாகிகளின் உடல் மறைந்தாலும் அவர்கள் செய்த தியாகம் அவர்கள் கொண்ட இலட்சியத்திற்கு எந்தக் காலத்திலும் வித்திட்டுக்கொண்டேயிருக்கும். தன்னலமில்லாத தியாகிகளின் ஆத்மா இறைவனாலேயே ஆசீர்வதிக்கப்படும் என்பதும் உண்மை."

இவ்வாறு நேற்று மாலை நல்லூர் முத்திரைச் சந்தை மைதானத்தில் நடைபெற்ற அமரர் டாக்டர் நாகநாதன் அஞ்சலிக்கூட்டத்தில் பேசிய ஊடுப்பிட்டி எம். பி. கே. ஜெயக்கொடி குறிப்பிட்டார். வழக்கறிஞர் மு. ஆலாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு ஜெயக்கொடி தொடர்ந்து பேசியதாவது -

"டாக்டர் நாகநாதன் உலகிலுள்ள பல நாடுகளுக்கும் சென்றவர் லண்டனில் கல்விகற்றவர். கொழும்பில் பெரிய செல்வந்தராக இருந்தவர். சிறந்த வைத்திய நிபுணர். அவரைத் தெரியாத அரசியல்வாதிகளே இலங்கையில் இடையாது. இத்தனை செல்வாக்கும் மதிப்பும் திறமையும் அறிவாற்றலும் நிறைந்த இவர் வேறு இனத்தைச் சேர்ந்தவராகவோ, வேறு நாட்டவராகவோ இருந்திருந்தால் அவர் ஒரு அமைச்சராகவோ பிரதமராகவோ வந்திருக்கமுடியும். ஆனால் அவர் இன்னல்களுக்கும் கஷ்டங்களுக்கும் மத்தியில் காலமானார். தான் கொண்ட இலட்சியத்திற்காக தன்னையே அர்ப்பணம் செய்த அஞ்சா நெஞ்சம் கொண்ட தியாகத் தலைவர் ஒருவரை நாம் கண்டோம் என்றால் அது டாக்டர் நாகநாதனாகத்தான் இருக்க முடியும். இவரது இழப்பு தமிழினத்திற்குப் பெரும் நஷ்டம்"

பருத்தித்துறை எம். பி. திரு கே. துரைரத்தினம் பேசுகையில் 'தமிழினத்தின் சரித்திரத்தில் டாக்டர் நாகநாதனின் வரலாறு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டும். அவரைப் போல் உண்மையான தியாகத் தலைவனை எந்த ஒரு இனமும் பெற்றிருக்கமுடியாது. தமது சுகத்தையும் சொத்துக்களையும் பெரிதாக மதியாதது மட்டுமன்றி இலட்சியத்திற்காகத் தமது உயிரையும்கூட மதியாத ஒரு உன்னதத் தலைவனை தமிழ் இனம் இழந்துவிட்டது' என்று குறிப்பிட்டார்.

தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு அ. அமிர்தலிங்கம், உடுவில் எம். பி. திரு வி. தர்மலிங்கம், செனட்டர் திரு எஸ். நடராசா, அட்வகேட் திரு சி. நாகராசா எம். எம். சி., இ. தி. மு. கழக மணவைத்தம்பி, திருமதி அமிர்தலிங்கம், பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம். பி. கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோருட்பட மற்றும் பலர் பேசினர்.

## துக்கம் அனுஷ்டித்தனர்

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவுப் பட்டின சபையின் முன்னாள் தலைவர் ஜனாப் வா. மு. அப்துல் சமது கடந்த 24-ம் திகதி திடீர் மரணமானதைத் தொடர்ந்து முல்லைத்தீவுப்பட்டினமே துக்கமனுஷ்டித்தது.

அன்னாரது இறுதிச்சடங்குகள் நடைபெற்ற அன்று பட்டினசபை எல்லைக்குட்பட்ட சகல தேநீர்க்கடைகள் மற்றும் வியாபார நிலையங்களும் மூடப்பட்டு கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. இனமத வேறுபாடின்றி இறுதிச் சடங்கில் மக்கள் கலந்துகொண்டனர்.

## இவ்வளவும்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட அமைச்சர், அதற்கு உடனடியாகவே பதிலும் கூறிவிட்டார். ஆயினும் அந்தப் பெண்மணி அமைச்சரின் பதிலுடன் திருப்தி அடையாததினால் போலும் தொடர்ந்து பல கேள்விகளைக்கேட்டுக்கொண்டிருந்தார். இவரின் கேள்விகளுக்கு அமைச்சரும் நிரந்தரச் செயலாளரும் எதுவித சலிப்புமின்றி, சிரித்த முகத்துடன் பதிலளித்துக்கொண்டேயிருந்தனர்.

தொடர்ந்து வர்த்தக சம்மேளனத்தினர் அமைச்சருக்கு 'பாம் கோட்' ஹோட்டலில் இரவுபோசனவிருந்து அளித்தனர். இதில் சுமார் ஐம்பதுக்கும் அதிகமான தொழில் அதிபர்கள், உட்பட யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா, நல்லூர் எம். பி. திரு வி. அருளம்பலம், யாழ் பதில் மேயர் திரு ஆ. துரைராஜசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஹோட்டலில் வைத்து வர்த்தக சம்மேளனத் தலைவர் டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா பிரமுகர்களை அமைச்சருக்கு அறிமுகம் செய்து வைத்தார். பதில்மேயர் திரு துரைராஜசிங்கத்தை டாக்டர் மகாதேவா அறிமுகம் செய்து வைத்தபோது, 'திரு துரைராஜசிங்கம் எனது பழைய பாசநண்பர்! அவரும் நானும் லங்கா சமசமாஜக் கட்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தபோது செய்திப் பத்திரிகைகளை [illegible] விரித்துவிட்டுப் படுத்திருந்த சம்பவங்களை மறக்கமுடியுமா?' என்று கூறினர். தமக்களிக்கப்பட்ட விருந்துக்கு அமைச்சர் நன்றிதெரிவித்துப் பேசுகையில், யாழ்ப்பாணத்தின் முன்னேற்றம் குறித்து மகிழ்ச்சியடைவதாகவும், தம்முடன் நீண்டநேரம் வாதாடிய வசந்தபுரம் சிக்க் ஸ்தாபனத்தின் உரிமையாளர்களில் ஒருவரான திருமதி அருணாசலத்தின் துணிச்சலைப் பாராட்டுவதாகவும், அவரின் பிரச்சினை குறித்து நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினர். தமது அழைப்பையேற்று வைபவத்தில் கலந்துகொண்ட அமைச்சருக்கு சம்மேளனத்தின் சார்பில் செயலாளரான திரு எஸ். வேலயுதபிள்ளை நன்றி கூறினர்.

# பிச்சையெடுத்த மூதாட்டி பணக்காரியாகச் செத்தார்

சுழிபுரம், ஞாயிறு

அனாதரவாகப் பிச்சையெடுத்துச் சீவனம் நடத்திவந்த வயோதிபப் பெண்ணின் மரணத்தையடுத்துப் பலர் அவர்மீது சொந்தம் கொண்டாட முன்வந்தனர். அவரது இறுதிச்சடங்குகள் மிக டாம்பீகமாக நடைபெற்றன.

சுழிபுரம் மேற்கைச்சேர்ந்த கந்தர் சைம்பெண் (வயது 71) என்பவருக்கே அவர் இறந்த பின்பு இவ்வித திடீர் கௌரவம் கிடைத்துள்ளது. அவரது மரணத்தின்பின் அவர் வாழ்ந்த சிறுகுடிசையில் ஆயிரக்கணக்கில் ரொக்கப் பணமும் மற்றும் கடன் பத்திரங்களும் கண்டெடுக்கப்பட்டதே செத்தபின்னர் இம் மூதாட்டிக்கு இவ்வித மரியாதை கிடைப்பதற்குக் காரணமெனப் பேசிக்கொள்ளப்படுகிறது.

வள்ளி என்ற இந்த வயோதிப மாது ஊரிலும் பஸ் நிலையத்திலும் சந்தையிலும் பிச்சையெடுத்தே வாழ்க்கை நடத்திவந்தார். உறவினர் ஒருவருடைய சிறு குடிசையில் இவர் வாழ்ந்து வந்தார். நேற்றிரவு அக்குடிசையில் இவர் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

இவர் இறந்ததையடுத்துக் குடிசையில் நடைபெற்ற தேடுதலில் கண்டெடுக்கப்பட்ட பொருள்களாவன. நாணயங்களாகவும் நோட்டுக்களாகவும் 2 ஆயிரத்துக்கு மேல் ரொக்கம், பணம் கொடுக்கல் செய்த கடன் பத்திரங்கள் மற்றும் அந்தியகால சங்கத்தில் பணம் செலுத்திய பத்திரங்கள்.

கூரை இறப்பிலும் பெட்டி கடகங்களிலும் இருக்கக் காணப்பட்ட பணம் ஒன்று சேர்க்கப்பட்டதுடன் மேலும் பணம் எங்காவது மறைத்து வைக்கப்பட்டிருக்குமென்னும் ஆராய்ச்சியில் 'உறவினர்' ஈடுபட்டுள்ளனர்.

நகை அடைவுக்குப் பணம் கொடுத்துள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

## கடைசிச் செய்தி

சைகோன், ஆக 29

வியட்நாமின் கீழ்சபைக்கான வாக்களிப்பு நடந்து முடிந்துள்ளது. வாக்களிப்பு நடந்துகொண்டிருக்கும் போது பலத்த தாக்குதல்களை கம்யூனிஸ்டுகள் மேற்கொண்டிருந்தனர் என்று செய்திகள் கூறுகின்றன.

வெளிவந்துள்ளது!

இதழ் - 3 மலர் - 1

ஆயுள்வேத பிரதீபிகா

விலை: ரூ. 2-00

விற்பனையாளர்:

சுந்தரம் பிறதர்ஸ்,

மருந்துகள், மருந்துச்சரக்குகள் விற்பனையாளர்

73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# “கொலைகள் மூலம் சோஷலிஸம் வராது”

## டாக்டர் பெரேரா கருத்து

கோட்டை, ஞாயிறு

"அவசர அவசரமாக சமதர்மத்தை ஏற்படுத்திவிடலாமென்ற எண்ணத்தில் மனிதர்களைக் கொலைசெய்து சமுதாயத்தை மாற்றத் துணிந்த திடீர்ப் புரட்சியாளர்கள் இப்பொழுது பயந்துபோய் இருக்கிறார்கள். உடைத்து இடித்துக்கொண்டும் மூட்டிமோதிக்கொண்டும் உருட்டிப் புரட்டிக்கொண்டும் கொலைகள் செய்துகொண்டும் நாட்டை நாசமாக்கிக்கொண்டும் நாம் எதிர்பார்க்கும் உண்மையான சோஷலிசத்தை உருவாக்கிவிட முடியாது. புனிதமும் தெளிவுமுள்ள அறிவின் துணைகொண்டு செயல்படுவதின் மூலமே உண்மையான சோஷலிசத்தைக் கொண்டுவர முடியும்"

இவ்வாறு நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா கொழும்பு பெரியாஸ்பத்திரியில் நடைபெற்ற ஊழியர்கள் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

இப்பொழுது அதிகரித்துள்ள உணவுப்பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கான சில நடவடிக்கைகள் பற்றி வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்னாவிடம் ஆலோசனைகள் நடத்திவருவதாகத் தெரிவித்த டாக்டர் என். எம். பெரேரா, விலைகளைக் குறைப்பது அரசாங்க நடவடிக்கைகளாலும், இதற்கானவுள்ள அதிகாரிகளின் முயற்சியாலும் மாத்திரம் முடியாது என்றும் பாவனையாளர்களதும் பொதுமக்களதும் ஒத்துழைப்பின் மூலமே இது சாத்தியமாகும் என்றும் தெரிவித்தார்.

## மொழித்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

மேலும் தமிழ் சொல்லாக்க இலாகாவுக்கு ஆலோசனை வழங்கத் தமிழ் ஆலோசனைக்குழு நியமிக்கப்படவில்லை. தமிழ் தெரியாத ஒரு சிங்கள அதிகாரியின் கீழ் இரு தமிழாராய்ச்சியாளர்கள் கடமையாற்றவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. கட்டாயத்தின்பேரில் ஓய்வெடுத்த தமிழ் அதிகாரிக்குப் பதில் ஒரு சிங்கள அதிகாரி தமிழ் மொழிபெயர்ப்புப் பகுதியின் பதில் சுப்பிரின்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவிக்கு நியமிக்கப்படத்தக்க தமிழர்கள் இங்கிருந்தும் அவர்களில் ஒருவராவது நியமிக்கப்படவில்லை.

இங்கு தமிழ்ப் பெயர்களைச் சிங்களமயமாக்குவதற்கான முயற்சிகளும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. யாழ்ப்பாணம் - யாப்பனய எனவும், மட்டக்களப்பு - மடக்களப்புவ எனவும், கந்தளாய் - கந்தளாவ எனவும், மடுவீதி - மடு பார எனவும் மொழிபெயர்க்கப்படுகின்றன.

தமிழ்ப் பகுதிக்குத் தெரிவு செய்யப்பட்ட மேற்படி அதிகாரி தமிழரால் தெரிவு செய்யப்படவுமில்லை, அங்கீகரிக்கப்படவுமில்லை.

இவற்றைப் பிரதமருக்குத் தெரிவித்த மொழித்திணைக்களத் தமிழ் அதிகாரிகள் பின்வரும் கோரிக்கைகளையும் அவருக்கு விடுத்துள்ளனர்.

■ தமிழ் பகுதிக்குப் பொறுப்பாக உயர் தமிழ் அதிகாரி ஒருவரை நியமிக்கவும்.

■ தமிழ் மொழிபெயர்ப்பு உதவி சுப்பிரின்டனை நீக்கவும்.

■ தமிழ் ஆராய்ச்சிப்பகுதிக்கு தமிழ் ஆராய்ச்சி அதிகாரி ஒருவரை நியமிக்கவும்.

■ தமிழ் ஆலோசனைக்குழுவொன்றை நியமிக்கவும்

■ தமிழ் மொழிபெயர்ப்புப் பகுதியில் ஏற்பட்டுள்ள 2 சுப்பிரின்டன்களுக்கான வெற்றிடங்களை விளம்பரப்படுத்தவும்.

■ தமிழ்ப் பிரிவின் நிர்வாகத்தைக் கவனிக்க உதவி ஆணையாளரை (தமிழர்) அனுமதிக்குமாறு ஆணையாளருக்கு உத்தரவிடவும்.

"இக்கோரிக்கைகளைப் பிரதமர் பிரசீலித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அவர் எடுக்காவிட்டால் தமிழ் மொழியில் அரசாங்கத்துக்குள்ள நோக்கத்தையே மொழித்திணைக்களமும் பிரதிபலிக்கிறது என்ற முடிவுக்கு நாங்கள் வருவோம்' என இத்[illegible] தமிழ் அதிகாரிகள் பிரதமருக்கு மேலும் தெரிவித்துள்ளனர்.

## யமனாக வந்த பலூன்

குருநகர், ஞாயிறு

ஐந்து வயதுக் குழந்தைக்கு பலூன் யமனாக வந்தது. கையில் பலூனை வைத்து விளையாடிய ஒட்டுமடத்தைச் சேர்ந்த குழந்தையொன்று தவறுதலாக பலூனை விழுங்கியதால் மரணமாகியது. ஆஸ்பத்திரியில் குழந்தையை அனுமதிக்க முன்னரே குழந்தை மரணமானதாகத் தெரிகிறது.

......

## மூடப்படவிருந்த—

(1-ம் பக்கத் தொடர்ச்சி

யிலும் இத்தொழிற்சாலை வளர்ந்துவருகின்றது

இன்றுள்ள தொழிற்சாலைகள் இந்த ரசாயனத் தொழிற்சாலை முக்கிய தொழிற்சாலையாகக் கருதப்படுகிறது. பெற்றோலியம் கூட்டுத்தாபனம், ரசாயன கூட்டுத்தாபனம், உருக்கு கூட்டுத்தாபனம் ஆகிய மூன்றும் இந்நாட்டில் முக்கிய பங்கெடுத்து வருவதால் அவை சரியாக இயங்க வேண்டும் மூன்று கூட்டுத்தாபனங்களும் ஒன்றுக்கொன்று இணைந்து செயலாற்றவேண்டும். எமது சோஷலிச அரசாங்கத்தின் கொள்கை இப்படியான தொழிற்சாலைகளை விஸ்தரித்து. பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுப்பதான் இந்த அடிப்படையில்தான் தொழிற்சாலைகளை விஸ்தரிக்கவேண்டும் பரந்தன் ரசாயன தொழிற்சாலை சரியான முறையில் இயங்கவேண்டும் தொழிற்சாலை நிர்வாகிகள் தொழிலாளர்கள் அரசாங்கத்துடன் ஒன்றுசேர்ந்து தொழிற்சாலை வளர்ச்சிக்கு பாடுபடவேண்டும்.

இன்றுள்ள இக்கட்டான சூழ்நிலையில் பொருளாதார நிலைமை மிகவும் மோசமாக இருக்கின்றது இந்த நிலைமையை உணர்ந்து சகல மக்களும் இன மத வேறுபாடுகளை விட்டு ஒன்றுசேர்ந்து இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் பாடுபட வேண்டும் அந்நிய செலாவணி இக்கட்டான நிலையில் இருக்கின்றது நிர்வாகிகளும் தொழிலாளர்களும் ஒன்றாக இணைந்து உழைக்கவேண்டும் ஒன்றுபட்டுக் கடுமையாக உழைத்தால்தான் இக்கால சந்ததியினர் மட்டுமன்றி வருங்கால சந்ததியினரும் நன்மையடைவார்கள்.

## மணிவாக்கு

ஒருநாடு செல்வச்செழிப்பாயிருப்பது பொருள் உற்பத்தி செய்வதில் அதற்குள்ள சக்தியையும் செல்வத்தைப் பகுத்தறிவுபூர்வமான முறையில் விநியோகிப்பதையும் பொறுத்தே இருக்கும்

—ஜவர்ஹர்லால்நேரு


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் ஆவணி மாதம் 14-ந் திகதி (30-8-71)


## வடக்கு வாழ....

வடபகுதிக்கு அமைச்சர்கள் வருகை தந்ததும் அவர்களுக்குக் கொடி, குடை, ஆலவட்டம்பிடித்து வரவேற்பளிப்பதும் வழமையான ஒரு சம்பிரதாயமாகப் போய்விட்டது. அவர்களும் இங்கு வந்து 'இதோ வரம் தந்தோம்' என்பதுபோல் வாக்குறுதிகளை அள்ளிக் கொடுத்துவிட்டுச் செல்வதும் ஒரு சம்பிரதாயமாக இருந்து வந்திருக்கிறது. "சமவுரிமை தந்தோம். சந்திரனையே பிடித்துத் தருவோம்' என்று உறுதிமொழி கூறிச் சென்ற அமைச்சர்கள், பிரதம அமைச்சர்கள் பற்றி வடபகுதி மட்டுமல்ல நாடே அறியும். இவர்கள் வடபகுதி விஜயத்தை முடித்துக்கொண்டு திரும்பும் போது வடபகுதியைத் தேனும் பாலும் ஓடும் பிரதேசமாக மாற்றுவதற்கு சகல உதவிகளையும் செய்வதாகப் பிரியாவிடைச் செய்தியில் கூறிச்சென்றதும் உண்டு. முன்னைய அரசாங்கத்தின் பிரதமர் டட்லி சேனநாயகா யாழ்ப்பாணத்துக்கு வந்து பசுமைப் புரட்சியைப் பாராட்டியதுடன் காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்திக்கு அடிக்கல் நாட்டியும் வைத்தார். காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தியடைந்துவிடுமென்றும் போக்குவரத்துச்சேவை சிறப்புறுமென்றும் வாணிபம் பெருகுமென்றும் பலரும் ஆகாசக் கோட்டைகள் கட்டினர். பிரதம மந்திரிகள், அமைச்சர்கள் வருவதும் வாக்குறுதியளிப்பதும் வரவேற்பைப்பெற்று வடபகுதிமக்களின் உழைப்பையும் ஊக்கத்தையும் பாராட்டித் திரும்புவதும் வழக்கப்பட்டவிஷயம்.

ஆனால் கைத்தொழில் விஞ்ஞான விவகார அமைச்சர் திரு சுபசிங்கா யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து தொழில் அதிபர்களையும் வடபகுதிப் பிரதிநிதிகள் அரசாங்க அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்துப்பேசியும் தொழிற்சாலைகள் ஆகியவற்றைப் பார்வையிட்டும் தெரிவித்த கருத்துக்கள், அவர் காரியத்தில் கண்ணும் உள்ளவரென்பதையும் வெறும் வாக்குறுதிகள் அளிப்பதில் நம்பிக்கையற்றவரென்பதையும் காட்டியிருக்கிறார். அமைச்சரின் யாழ்ப்பாண விஜயத்தையொட்டி மூன்று தினங்களுக்குமுன் நாம் எழுதிய தலையங்கத்தில் அவர் ஒரு சிறந்த முற்போக்குவாதியென்றும் இன, மத வேறுபாடற்றவர் என்றும் குறிப்பிட்டிருந்தோம். இதை அவர் நிரூபித்துச் சென்றிருக்கிறார். வடக்கோ தெற்கோ கிழக்கோ மேற்கோ எந்தவொரு பகுதியில் வறுமைவேறபட்டாலும் அதனால் நாடுமுழுதும் பாதிக்குமென்பதையும் எந்தவொரு பகுதி செழிப்படைந்தாலும் அதனால் நாடுமுழுதும் பயனடையும் என்றும் அவர் கூறியிருப்பதும் தேசிய ரீதியில் கண்ணோட்டம் செலுத்திப் பிரச்சினைகளை அணுகுவதும் அவரது திறமைக்குச் சான்று. இதுதான் நேர்மையான ஓர் அரசியல்வாதியின் பண்பாக இருக்கவேண்டும்.

முன்னர் தான்பார்த்த யாழ்ப்பாணத்துக்கும் இப்போதுபார்க்கின்ற யாழ்ப்பாணத்துக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறதென்று கூறிய அமைச்சர் வடஇலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த கைத்தொழில் உற்பத்திப் பொருள்களின் காட்சியைப் பார்த்து பிரமிப்படைந்தாராம். யாழ்ப்பாண மக்களின் கடும்உழைப்பையும் அவர் பாராட்டியிருக்கிறார். வடபகுதியின் சுவாத்தியம் சூழ்நிலை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு இப்பகுதிமக்கள் விவசாயத்திலும் இப்போது கைத்தொழிலிலும் பெரும் முயற்சி செய்கின்றனர். இதற்கு முன்னோடியாக உள்ள தொழில் அதிபர்கள் பாராட்டுக்குரியவர்கள்தான்.

'தூரத்துப்பச்சை கண்ணுக்குக்குளிர்ச்சி' என்பார்கள். அமைச்சர் சுபசிங்காவும் தூரத்திலிருந்து அதுவும் நீண்ட நாட்களின் பின் யாழ்ப்பாணத்துக்கு வந்துபார்த்ததால் யாழ்ப்பாணம் முன்னேறிவிட்டது! இங்கு மக்களுக்கு எதுவித பிரச்சினையுமில்லை; யாதொரு கஷ்டமுமில்லை என்றுநினைத்துக் கொண்டு திரும்பக்கூடாதென்பதே நமது கவலை.

பள்ளிப் படிப்புப் படித்து வேலையற்றிருக்கும் வாலிபர்களின் தொகை நாட்டின் இதர இடங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாணத்திலேயே அதிகமென்பதையும் யாழ்ப்பாண மக்கள் என்னதான் கடும் உழைப்பாளிகளாக இருந்தாலும் படித்த வாலிபர்கள் வயல்களிலும் ஆலைகளிலும் வேலைசெய்யக் கூச்சமடைகிறார்களென்பதும் தெரிந்த விஷயம்.

வடபகுதியில் மூலவளம் நிறைய இருக்கின்றது; உழைப்புச் சக்திக்கும், மூளைப்பலத்துக்கும் குறைவில்லை. அவற்றை சரியாகப் பயன்படுத்த வேண்டும்; திட்டமிட்டுப் பயன்படுத்த வேண்டும். கற்பகதருவென வர்ணிக்கப்படும் பனையிலிருந்தே நமது தேவையைப் பூர்த்திசெய்து வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியையும் சம்பாதிக்கக்கூடிய பல பொருள்களையும் இங்கு உற்பத்தி செய்யமுடியும்.

நெசவாலை அதிபர்கள் அமைச்சரிடம் நெசவு நூல் தட்டுப்பாடு பற்றிக் கேட்ட ஒரு கேள்விக்கு எகிப்து, இந்தியா, பாகிஸ்தான் முதலிய நாடுகளிடமிருந்து நெசவு நூல் இறக்குமதி செய்யப்படவிருப்பதாகவும் இவை வந்துசேர்ந்ததும் நூல் தட்டுப்பாடு நீங்கும் என்றும் பதிலளித்திருக்கிறார். நெசவுநூல் இறக்குமதிக்கும் பெருமளவில் அந்நிய செலாவணி தேவை. நமது நாட்டில் பருத்தியை உற்பத்திசெய்யக் கூடிய பிரதேசங்கள் பல உள. இங்கு பருத்தி உற்பத்தி செய்து, இந்தியாவில் காந்தி ஆரம்பித்ததுபோல் நூல் நூற்பு இயக்கத்தைக் குடிசைக் கைத்தொழிலாக இங்கும் ஆரம்பித்தால் வேலைவாய்ப்புக் அதிகரிக்கும் அந்நியச் செலாவணியும் மிஞ்சும்; நூலுக்காக வெளிநாடுகளை எதிர்பார்க்கும் நிலையும் ஒழியும்.

நாட்டின் கைத்தொழில் அபிவிருத்திக்கு வடபகுதி பெருமளவில் உதவமுடியும். இதற்கு அரசாங்கத்தின் உதவியும் ஊக்கமும் வேண்டும். கைத்தொழில் அமைச்சரின் வடபகுதி விஜயம் இதற்கு வழி செய்யுமென்று நம்புவோம்.

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இவ்வளவும் இங்கே உற்பத்தி செய்யப்பட்டவையா?

## வடக்கின் வளர்ச்சிகண்டு அமைச்சர் பெருமிதம்

— எஸ். கே. காசிலிங்கம் —

வடபகுதியின் நாளுக்கு நாள் முன்னேறிவரும் கைத்தொழில் அபிவிருத்தி பற்றி நமது அரசாங்கத்தினருக்கு நேரடியாகக் காட்டு முகமாக ஒழுங்குசெய்யப்பட்ட வைபவம் ஒன்று நேற்று முன்தினமிரவு யாழ்ப்பாண நகரில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா இவ்விழாவில் கலந்துகொண்டு வடபகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பலதரப்பட்ட பொருட்களையும் நேரில் பார்வையிட்டார். அமைச்சருடன் அவரது அமைச்சின் நிரந்தரச் செயலாளரும் வந்திருந்தார்.

வடபகுதியின் கைத்தொழில் அபிவிருத்தி பற்றியும் இங்கு அரசாங்கம் மேற்கொள்ளவேண்டிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் பற்றியும் நேரில் கண்டறிவதற்காக வடபகுதிக்கு விஜயம் செய்த அமைச்சருக்கு இப்படியானதொரு பொருட்காட்சியை ஒழுங்குசெய்து நமது பகுதி மக்களின் கெட்டித்தனத்தை அமைச்சருக்கு ஒரேபார்வையில் நேரில் காட்டுவதற்கு இவ்வைபவத்தை ஒழுங்குசெய்த வடஇலங்கை வர்த்தக - கைத்தொழில் சம்மேளனத்தினர் பாராட்டுக்குரியவர்கள்.

ஒரு நீள்சதுர அறையில் அமைந்திருந்த இந்தக் 'குட்டி'ப் பொருட்காட்சி வடபகுதியில் நடைபெற்றுவரும் கைத்தொழில் புரட்சியை அமைச்சருக்கு தெட்டத்தெளிவாக எடுத்து விளக்க உதவியாகவிருந்தது. கைத்தொழில் நிறுவனங்களின் முயற்சிகளை நேரில் கண்டறிவதற்காக இங்கு வருகைதந்திருந்த அமைச்சர் இங்குள்ள சகல நிறுவனங்களுக்கும் நேரில் சென்று பார்வையிடாமலேயே வடபகுதியில் நடைபெறும் ஆக்கபூர்வமான வேலைகளையும் - கைத்தொழில் அபிவிருத்தியில் எமது நாட்டின் தேவையை ஓரளவாவது பூர்த்திசெய்யும் அரும்பணியில் வடபகுதி மக்களும் அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுகிறார்களென்பதையும் அமைச்சர் புரிந்து கொள்ளக்கூடியதாக அமைந்திருந்தது இந்த வைபவம்.

உடுப்பிட்டி வல்லையில் உள்ள சிலோன் ஸ்பின்னிங் அன் வீவிங் மில்ஸ் நிறுவனத்தாரால் உற்பத்தி செய்யப்பட்ட புடவைகள், அஜந்தா ரெக்ஸ் பிறின்டேர்ஸாரால் உற்பத்திசெய்யப்பட்ட சேலைவகைகள், பெனின்சுலா கிளாஸ் வேர்க்ஸ் நிறுவனத்தினரால் உற்பத்திசெய்யப்பட்டகிளாஸ், சிம்னி போன்றவை, ஏரோ எலக்றிகல் இன்டஸ்ரீஸ் ஸ்தாபனத்தார் தயாரிசெய்யும் மின்சாரப் பொருள்கள் கோப்பாயிலுள்ள சேவி கிளாஸ் வேர்க்ஸ் ஸ்தாபனத்தாரின் கிளாஸ் உற்பத்திகள், என். ஆர். இன்டஸ்ரீஸ் நிறுவனத்தினர் தயாரி செய்த ஆயுள்வேத மருந்து வகைகள், நோர்தேண் இன்டஸ்ரீஸ் ஸ்தாபனத்தினரால் திருத்தி அமைக்கப்பட்ட டயர்கள், இராம கிருஷ்ணன் நிறுவனத்தினரின் மோட்டார் உதிரிப்பாகங்கள், யாழ் மெற்றல் இன்டஸ்ரீஸ் உற்பத்தி செய்த திருவாசி, தட்டம், செம்பு போன்ற பொருட்கள், வசந்தபுரம் சில்க்ஸ் நிறுவனத்தினரின் அழகிய பட்டுடைகள், அரலிகோ ரொபி வகைகள், மில்க்வைற்சோப் ஸ்தாபனத்தாரின் தயாரிப்புகள் போன்ற பல பொருள்கள் இந்தப் பொருட்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

இவற்றையெல்லாம்நேரில் பார்வையிட்ட கைத்தொழில் அமைச்சர் "இந்தப் பொருள்கள் எல்லாம்யாழ்ப்பாணத்திலேதான் உற்பத்தி செய்யப்பட்டனவா" என்று ஆச்சரியத்துடன் கேட்டபோதுதான் வடபகுதி கைத்தொழிலில் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளது என்பதை என்னால் உணரமுடிந்தது. இவற்றை யெல்லாம் பார்வையிட்ட பின்னர் அமைச்சர் கைத்தொழிலில் யாழ்ப்பாண மக்களின் சேவையைப் பாராட்டி யாழ்ப்பாணம் நாளுக்குநாள் முன்னேறி வருவதுகண்டு தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகக் கூறினார்.

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் கலந்துகொண்டு பேசியபோது ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கைத்தொழில் அபிவிருத்தித் திட்டம்பற்றியும் நாடு இப்போதுள்ளநிலையில் அதன் அவசியம்பற்றியும் தெட்டத்தெளிவாக விளக்கினார். சிறுகைத்தொழில்களுக்கு அரசாங்கத்தின் ஆதரவு கிடைக்கும் என்றும் உள்ளூர் மூலப்பொருட்களைக்கொண்டு தயாரிக்கப்படும் பொருட்களை அதிகளவில் உற்பத்தி செய்ய வேண்டுமென்றும் இவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உற்பத்தி அதிகரிக்கவேண்டும் என்றும் அமைச்சர் கூறினார். தாம் பேசிமுடிந்ததும், வர்த்தக சம்மேளன அங்கத்தவர்களுக்கு உள்ள கஷ்டங்களை தெரியப்படுத்துமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டுவிட்டு, கதிரையில் அமர்ந்தார். அப்போது பலதொழில் அதிபர்களும் தங்களுக்குள்ள சொந்தக் கஷ்டங்கள் பற்றியும், தங்கள் கைத்தொழில் நிறுவனங்களின் பதிவுத் தாமதம் பற்றியும் அமைச்சருக்கு எடுத்துக்கூறினர். ஒவ்வொருவரும் கேட்ட சந்தேகங்களுக்கு அமைச்சர் தனித்தனியாக விளக்கம் கூறி ஒவ்வொருவரின் கஷ்டங்களையும் நேரில் கேட்டறிந்தார். சிலரின் கேள்விகளுக்கு அமைச்சருடன் சேர்ந்து நிரந்தரச் செயலாளரும் பதில் கூறினார்.

அமைச்சர் என்ற பெருமிதமின்றி ஒரு சாதாரண மனிதனாகவே காட்சியளித்த திரு சுபசிங்கா, தொழில் அதிபர்கள் பலரும் மேல்நாட்டுடையில் வந்திருந்து கூறிய கஷ்டங்களை தேசிய உடையிலிருந்துகொண்டு கேட்டறிந்தார். இவ்வைபவத்தில் கலந்துகொண்ட இருபெண் தொழில் அதிபர்களில் ஒருவர் தமது நெசவாலையில் உற்பத்திசெய்யப்படும் சில்க் சேலைகளின் தரம்பற்றியும், தமது ஸ்தாபனம் அரசாங்கத்தினரால் பதிவுசெய்யப்படுவதற்கு ஏற்பட்டுள்ள தாமதம்பற்றியும் எடுத்துக்கூறினார். இவரது பிரச்சினைகளை கேட்டறிந்து

(5-ம் பக்கம் பார்க்க)


## திருமணம்

### இராமச்சந்திரன்—சித்திரலேகா

மணமகன்: திருநிறைசெல்வன் இராமச்சந்திரன்
(சுகாதார வைத்திய அதிகாரி, முல்லைத்தீவு)
(புலோலியூர் காலஞ்சென்ற திரு. மயில்வாகனம் அவர்களின் புதல்வன்)

மணமகள்: திருநிறைசெல்வி சித்திரலேகா
(உடுவில் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் அவர்களின் புதல்வி)

இடம்: சுன்னாகம் கதிரமலைச் சிவன்கோவில்

காலம்: இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கும் 7 மணிக்குமிடையேயுள்ள சுப முகூர்த்தம்

வரவேற்பு: (31-8-71) நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி முதல் மணமகள் இல்லம்— காமதேனு, கந்தரோடை.

(தனிப்பட்ட அழைப்பில்லை.) 2652